# பாரத பிரதமரின் கத்தார் தலைநகர் தோஹா பயணம்

பிப்ரவரி 14, 2024

1. கத்தார் நாட்டுக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று தோஹா சென்றடைந்தார். இது பிரதமரின் இரண்டாவது கத்தார் பயணமாகும். அவர் முதல் முறையாக ஜூன் 2016 இல் கத்தாருக்கு பயணம் செய்தார்.

2. பிரதமரை விமான நிலையத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. H.E. சோல்தான் பின் சாத் அல்- முரைக்கி வரவேற்றார்.

3. பாரத பிரதமரின் இரண்டு நாள் பயணத்தின் போது, அவர் கத்தார் பிரதமர் மேதகு ஷேக் முகமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி அவர்களால் நடத்தப்படும் இரவு உணவு விருந்தில் கலந்து கொள்கிறார். மேலும் அவர் பிப்ரவரி 15 ஆம் தேதியன்று, கத்தாரின் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானியைச் சந்தித்து இருதரப்பு மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

**தோஹா**
**பிப்ரவரி 14, 2024**